சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்)
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590

**ஆணை நாள் 06.07.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இ.கா.ப. (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

**•••••**

**வழக்கு எண். SA 17184/E/2024**

திரு.மு.முகமது அலி கிர்மானி -- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம், பொது அதிகார அமைப்பு
புரசைவாக்கம் வட்டம்,
சென்னை மாவட்டம் - 600 007.

******

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (06.07.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மேல்முறையீட்டாளர் | திரு.மு.முகமது அலி கிர்மானி அவர்கள் இன்றைய விசாரணையில் ஆஜராகவில்லை. |
| தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012 விதி 7(2)-ன்படி மேல்முறையீட்டாளர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது | |
| பொது அதிகார அமைப்பின் சார்பாக | திருமதி.பார்கவி, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், புரசைவாக்கம் வட்டம், சென்னை மற்றும் பொதுத் தகவல் அலுவலர் திரு.B.செல்வக்குமார், நிலஅளவையர், புரசைவாக்கம் ஆகியோர் ஆஜரானார்கள். |
| சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் மனு நாள் | 08.05.2024 |
| **கோரிய தகவல்**, கதவு எண்.304/170, 10 லிங்கிச் செட்டி தெரு, பிளாக் எண்.96-ல் சர்வே எண்.11651/0 வ.வு.சி நகர், ஜார்ஜ் டவுன், சென்னை-1-ல் அமைந்துள்ள இடத்திற்கு | |

| | |
|---|---|
| அடங்கல் மற்றும் பட்டாவில் மிர்சா முகம்மது நமாஜீ என்ற உரிமையாளர் பெயரில் உள்ளது என்றும், எதன் அடிப்படையில் எந்த ஆவணத்தின்படி மேற்கண்ட அடங்கல் மற்றும் பட்டாவில் மிர்சா முகம்மது நமாஜீ பெரில் உள்ளது, மேற்கண்ட அடங்கலிலும், பட்டாவிலும் உள்ள மொத்த பரப்பளவு எவ்வளவு உள்ளது உள்ளிட்ட 3 இனங்களில் தகவல்களை வழங்கக் கோரி, பொதுத் தகவல் அலுவலர், வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், புரசைவாக்கம், சென்னை அவர்களுக்கு மனு செய்துள்ளார். | |
| பொதுத் தகவல் அலுவலர் பதில் கடிதம் | --- |
| சட்டப் பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனு நாள் | 15.07.2024 |
| மேல்முறையீட்டு அலுவலர் பதில் கடிதம் | --- |
| சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் | 22.08.2024 |

•••••

- பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்து துணை வட்டாட்சியர், புரசைவாக்கம் அவர்கள், இவ்வழக்கில் மனுதாரர் கோரியுள்ள தகவலான நிலம் தொடபானது என்பதால் ஏற்கனவே வட்ட சார் ஆய்வாளர்/ பொதுத் தகவல் அலுவலர், புரசைவாக்கம் அவர்களால் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என தெரிவிக்கிறார்.
- பொதுத் தகவல் அலுவலர்/ நிலஅளவையர், புரசைவாக்கம் அவர்கள், இவ்வழக்கில் கோரிய தகவல்கள் தங்கள் அலுவலக கடித ந.க.எண்.ஆ2/005/2026, நாள் 05.01.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளதாக எடுத்துரைக்கிறார்.
- பொதுத் தகவல் அலுவலர்களின் வாதத்தின் மீதான எதிர் வாதத்தினை எடுத்துரைக்க மனுதாரர் இன்றைய விசாரணையில் ஆஜராகவில்லை.

2. பொதுத் தகவல் அலுவலர்களின் வாதம் மற்றும் ஆவணங்களை ஆணையம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது:-

a) மனுதாரர் சட்டப் பிரிவு 6(1)-ன்கீழ் கோரியுள்ள 4 இனங்களுக்கான தகவல்களுக்கு 05.01.2026 அன்று மேல்முறையீட்டு அலுவலர் மற்றும் வட்டத் துணை ஆய்வாளர், புரசைவாக்கம் அவர்களால் மனுதாரருக்கு அனுப்பட்டுள்ள தகவல் முன்னுக்குப்பின் முறனாக உள்ளது இன்றைய ஆவண பரிசீலனையில் தெரியவருகிறது.

b) எனவே, **பொதுத் தகவல் அலுவலர்/ நில அளவையர், புரசைவாக்கம் அவர்கள் இவ்வாணை கிடைக்கப்பெற்றவுடன்**, இவ்வழக்கில் மனுதாரர் சட்டப் பிரிவு 6(1)-ன்கீழ் கோரியுள்ள 4 இனங்களுக்கான உரிய தகவல்களை இனம் வாரியாக பட்டியலிட்டு, கட்டணம் ஏதுமின்றி, <u>அலுவலக முத்திரையுடன் கூடிய சான்றொப்பத்துடன்,</u> ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில்

மனுதாரருக்கு வழங்கி, மனுதாரர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்ததற்கான ஒப்புகை அட்டையின் நகல் அல்லது அஞ்சல் துறையின் இணையதள அறிக்கையின் நகல் (Online Tracking Consignment) மற்றும் வழங்கப்பட்ட தகவல் குறித்த அறிக்கையின் நகலினை **இவ்வாணையத்தில் 04.08.2026 அன்று நேரில் சமர்ப்பிக்க உத்தரவிடப்படுகிறது.**

**c)** மனுதாரரின் 08.05.2024 தேதியிட்ட சட்டப் பிரிவு 6(1) மனுவினை பெற்றுக்கொண்டு, மனு பெறப்பட்ட 30 தினங்களுக்குள் தகவல் வழங்கத் தவறிய அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் யார் என கண்டறிந்து அவர் மீதும் சட்டப் பிரிவு 20(1)-ன்கீழ் பணத்தண்டமும், 20(2)-ன்கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் ஏன் பரிந்துரைக்கக் கூடாது என்பதற்கான எழுத்துப்பூர்வமான விளக்கத்தினையும், பெற்று, அதனை ஓர் அறிக்கையாக தயார் செய்து அவ்வறிக்கையினை இன்று ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக **இவ்வாணையத்தில் 04.08.2026 அன்று நேரில் சமர்ப்பிக்க முதல் மேல்முறையீட்டு அலுவலர், வட்டாட்சியர், புரசைவாக்கம், சென்னை அவர்களுக்கு உத்தரவிடப்படுகிறது.**

**d)** மேலும், மனுதாரர் 15.07.2024 தேதியிட்டு தனது முதல் மேல்முறையீட்டு மனுவினை, மேல்முறையீட்டு அலுவலர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சென்னை அவர்களுக்கு முகவரியிட்டுள்ளார். மேற்படி மனுவினை பெற்றுக்கொண்டு, மனுதாரருக்கு தகவல் வழங்காத அப்போதைய முதல் மேல்முறையீட்டு அலுவலர் யார் என கண்டறிந்து, அவர் மீது சட்டப் பிரிவு 20(2)-ன்கீழ் நடவடிக்கை மேற்கொள்ள ஏன் பரிந்துரைக்கக் கூடாது என்பதற்கான அவரது எழுத்து மூலமான விளக்கத்தினை பெற்று, அதனை ஓர் அறிக்கையாக தயார் செய்து அவ்வறிக்கையினை, **இவ்வாணையத்தில் 04.08.2026 அன்று நேரில் சமர்ப்பிக்க பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது)/ (நிலம்), சென்னை அவர்களுக்கு உத்தரவிடப்படுகிறது.**

e) மேற்படி உத்தரவினை முழுமையாக நிறைவேற்றி அதுகுறித்த அறிக்கையினை குறிப்பிட்ட தேதியில் இவ்வாணையத்தில் சமர்ப்பிக்க தவறும் பட்சத்தில், விளக்கம் அளிக்க ஏதும் இல்லை என ஆணையத்தால் கருதப்பட்டு சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என எச்சரிக்கப்படுகிறது.

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 17184/E/2024</u>**

**<u>பெறுநர்</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது)/ (நிலம்),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சென்னை-1.

முதல் மேல்முறையீட்டு அலுவலர்/ வட்டாட்சியர்,
புரசைவாக்கம் வட்டம், சென்னை மாவட்டம் - 600 007.

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத் துணை வட்டாட்சியர்,
புரசைவாக்கம் வட்டம், சென்னை மாவட்டம் - 600 007.

**<u>மேல்முறையீட்டாளர்</u>**

திரு.மு.முகமது அலி கிர்மானி,
எண்.3/213, விவேகானந்தர் தெரு,
M.A. நகர், செங்குன்றம், சென்னை - 600 052.

Copy to: File MP/PA-